Registered as a News Paper in Sri Lanka பக்கங்கள்: 04 விலை ரூபா: 3-50

# ஈழநாதம்

THE EELANAATHAM **Peoples Daily** மக்கள் தினசரி

நாதம் 01 பிரமோதூத ஸூ புரட்டாதி மீ 26 உ வெள்ளிக்கிழமை (12 - 10 - 1990) ஹிஜ்ரீ 1411 ரபி. அப். 22 ஓசை 237

## ஊழியர் வருகின்றனர் அலுவலகள் இல்லை

வவுனியா அரச அலுவலங்களில் பணிபுரியும் ஊழியர்கள்பலர் யாழ்ப்பாணத்திலிருந்து வவுனியா வந்து சேர்ந்துள்ளனர். ஊழியர்கள் அனைவரும் தத்தமது அலுவலங்களுக்குச் சென்று கையெழுத்திடுகின்றனர்.

ஆனால் வவுனியாவில் முழுமையாக எந்தவொரு அலுவலகமும் இயங்கத் தொடங்கவில்லை. நகரத்திற்கு சென்றுள்ள பல அரச ஊழியர்கள் அச்ச நிலையிலேயே காணப்படுகின்றனர். (தி)

## யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பு சென்றோர்

# ஆயிரக்கணக்கில் முகாமில்

# நூற்றுக்கணக்கில் காவலில்

(கொழும்பு)

யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பு செல்லும் தமிழர்கள் குறிப்பாக இளைஞர்களும், யுவதிகளும் இராணுவத்தினரால் பெரும் இன்னல்களுக்கு உள்ளாவதாகவும் இளைஞர்கள் நூற்றுக்கணக்கில் கைதுசெய்யப்பட்டுள்ளதாகவும், ஆயிரக்கணக்கானோர் அகதிமுகாம்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

யாழ்ப்பாணத்தில் இருந்து கடந்த சில நாட்களின் முன் கொழும்பு செல்வதற்காக வவுனியா வந்த ஆயிரக்கணக்கான தமிழர் தற்போது வவுனியாவில் உள்ள அகதிமுகாமில் இராணுவத்தினரால் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். இவ்வாறுஏறத்தாழ 8000பேர் உள்ளனர். சிலர் வவுனியா நகருக்குள் செல்லும் பூந்தோட்டப் பகுதி வீடுகளிலும் வீதிகளிலும் தங்கியுள்ளனர்.

அதேவேளை வவுனியா நகருக்குள் புகுவதற்கும், புகையிரத நிலையத்திற்குப் போவதற்கும் முன்னர் இராணுவத்தி

(4ஆம் பக்கம் பார்க்க)

## ஊழியர் தமது உயிருக்கு உத்தரவாதம் இல்லையாம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகரசபை மீண்டும் பழைய இடத்தில் அடுத்த வாரம் இயங்க இருப்பது குறித்து தமது பாதுகாப்புக்கு உத்தரவாதம் இல்லை என யாழ். மாநகரசபை ஊழியர்கள் ஆணையாளரிடம் முறையிட்டுள்ளனர்.

கடந்த ஆகஸ்ட் மாதம் தொடர்ச்சியாக மாநகரசபை அலுவலகம் மீது குண்டு வீச்சுக்களுக்கு இலக்கானதிலிருந்து நல்லூர் இந்து விடுதிக்கு மாற்றப்பட்டிருந்தது. இப்பொழுது மீண்டும் இவ் அலுவலகத்தை பழைய இடத்துக்கு மாற்றத் தீர்மானித்ததால் தொடர்ந்து அலுவலக ஊழியர்கள் குண்டுவீச்சு பற்றி அச்சம் தெரிவித்துள்ளனர். (லோ)

## யாருடைய வற்புறுத்தலாலும் பேச்சுவார்த்தை இடம் பெறாது

(கொழும்பு)

வற்புறுத்தல்களுக்காகவோ அல்லது எவருடைய கோரிக்கைகளுக்காகவோ தமிழீழ விடுதலைப் புலிகளுடன் அரசாங்கம் நிபந்தனையின்றி பேச்சுவார்த்தை நடத்தமாட்டாது என்று பாதுகாப்பு இணை அமைச்சர் ரஞ்சன் விஜேயரத்தினா தெரிவித்துள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகள் ஆயுதங்களை கையளித்தாலே மீண்டும் பேச்சுவார்த்தை நடத்தப்படும் என்று குறிப்பிட்ட அமைச்சர், அரசாங்கம் இனி உறுதியான கொள்கையைக்கடைப்பிடிக்கும் என்றும் குறிப்பிட்டார்.

## பெண்ணுடன் படையினர் சேட்டை இளைஞர் படையுடன் கைகலப்பு

(வவுனியா)

வவுனியாவில் தன் உறவினர் பெண்ணுடன் அங்கசேஷ்டையில் ஈடுபட்ட சிறிலங்கா இராணுவத்தினர் சிலரைத் தாக்கிய தமிழ் இளைஞர் இராணுவத்தினரால் மயக்கம் அடையும் வரையும் தாக்கப்பட்டு இழுத்துச் செல்லப்பட்டார்.

இச் சம்பவம் கடந்த 9ஆம் திகதி நடைபெற்றது. இச் சம்பவம் பற்றித் தெரியவருவதாவது.

யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு செல்வதற்காக வவுனியா வந்தடைந்த குறிப்பிட்ட வாலிபர் இராணுவத்தினரின் அனுமதியைப் பெற்று, எல்லோரையும் போல் புகையிரத நிலையம் செல்லும் நோக்கத்துடன் நூற்றுக்கணக்கான பிரயாணிகளுடன் வரிசையாகநின்றார்.

(4ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியாவில் தமிழ்ப்பொலிஸ் உளவாளிகளால் கைது

(வவுனியா)

வடபகுதியைச் சேர்ந்த தமிழ்ப் பொலிஸ்காரர் ஒருவர் வவுனியா ரயில் நிலையப் பகுதியில் இராணுவ உளவாளிகள் என்று சந்தேகிக்கப்படும் சிலரால் தாக்கப்பட்டு கைது செய்யப்பட்டார்.

இச் சம்பவம் பற்றிமேலும் தெரியவருவதாவது,

கடந்த எட்டாம் திகதி யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு செல்லும் நோக்குடன்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியாவில் இராணுவத்தின் காவல் அரண்கள் அதிகரிப்பு

(வவுனியா)

வவுனியா நகரப் பகுதியில் ஏராளமான காவல் முகாம்கள் அமைக்கும் வேலையில் இராணுவத்தினர் ஈடுபட்டுள்ளனர்.

வவுனியா மன்னார் வீதியில் குருமன்காடு சந்தியில் இராணுவத்தினரால் ஏற்கனவே காவல் முகாம் அமைக்கப்பட்டுள்ளது. இதே மாதிரி வவுனியா யாழ். வீதியில் பிறவுண்

(4ஆம் பக்கம் பார்க்க)

## 'போர் மண்ணிலே புனிதத்தாய்'

(அச்சுவேலி)

தமிழீழவிடுதலைப்புலிகளின் கலை கலாசாரப் பிரிவினால் தயாரிக்கப்பட்ட ''போர்மண்ணிலே புனிதத்தாய்'' ஆடலிசைக் கூத்து கிராமங்கள் தோறும் மேடையேற்றப்பட்டு வருகின்றது.

''போர் மண்ணிலே புனிதத்தாய்'' ஆடலிசைக் கூத்தினை கண்டுகளிக்க விரும்புவோர்

(4ஆம் பக்கம் பார்க்க)

## அடிக்கடிபடகுகள் கவிழ்கின்றன

(தீவுப்பகுதி)

அராலித்துறையில் சேவையில் ஈடுபட்டு வரும் சிறிய வள்ளங்களில் அளவுக்கு மீறிய பிரயாணிகளையும், பத்துக்கு மேற்பட்ட சைக்கிள் வண்டி

(4ஆம் பக்கம் பார்க்க)

## கொழும்பிற்கு புலிகள் வந்ததாக பாதுகாப்பு அதிகாரிகள் சந்தேகம்

### — ரஞ்சன்

(கொழும்பு)

கொழும்பில் நேற்றுக் காலை தனியார் விடுதிகளில் தங்கியிருந்த தமிழ் இளைஞர்கள் இருநூற்றிற்கு மேற்பட்டோர் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டதாக சிறிலங்கா பாதுகாப்பு இணை அமைச்சர் ரஞ்சன் விஜேயரட்னா தெரிவித்தார்.

நேற்றுப் பத்திரிகையாளர் மாநாட்டில் கொழும்பு வரும் தமிழ் இளைஞர்கள் பற்றிப் பிரஸ்தாபித்த அமைச்சர் ரஞ்சன் விஜேயரட்னா உரிய பாதுகாப்பு அனுமதி பெறாமல் வடக்கு கிழக்கு இளைஞர்களைத் தங்க வைக்கும் சொந்தக்காரர்கள், மற்றும் முகாமைத்துவப் பணிப்பாளர்கள் ஆகியோரும் கைது செய்யப்படுவார்கள் எனவும் தெரிவித்தார்.

(4ஆம் பக்கம் பார்க்க)

## இறக்கக்கண்டி முகாம் மீது புலிகள் ஷெல் தாக்குதல்

(திருக்கோணமலை)

திருக்கோணமலையில் உள்ள இறக்கக்கண்டி சிறிலங்கா இராணுவ முகாம்மீது விடுதலைப் புலிகள் பலத்த ஷெல் தாக்குதலை மேற்கொண்டுள்ளனர்.

கடந்த செவ்வாய்க்கிழமை மேற்கொண்ட இத் தாக்குதலினால் இராணுவ தரப்பில் பலத்த சேதம் ஏற்பட்டது. இத் தாக்குதலில் கொல்லப்பட்ட இராணுவத்தினரின் எண்ணிக்கை பற்றிய விபரம் சரியாகத் தெரியவில்லை. (க)

உள்ளே
மன்னார் பிரதேசத் தளபதி
லெப். கேணல் விக்டரின்
வண்ணப்படம்

## மிதிவெடியில் பலர் காயம்

(மண்டைதீவு)

பண்ணைப் பாலப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் வைத்துச் சென்ற மிதிவெடிகளில் அகப்பட்ட பலர் பலத்த காயமடைந்துள்ளனர். ஒருவர் தனது காலில் ஒன்றை இழந்துள்ளார்.

நேற்று முன்தினம் இரவு நடந்த இச் சம்பவத்தில் புங்குடுதீவைச் சேர்ந்த க. கணபதிப்பிள்ளை (வயது 52) என்பவர் தமது காலில் ஒன்றை இழந்துள்ளார்; நாகேந்திரன் (வயது 35), சத்தியசீலன் (வயது 40), தம்பிராசா (வயது 35), இராமச்சந்திரன் (வயது 40), ஆகியோர் பலத்த காயமடைந்த நிலையில்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## விக்டரின் நினைவு நாள்

மன்னார்மண்ணில் 12-4-86 இல்வீரமரணமடைந்தலெப்டினன் கேணல் விக்டர்,மற்றும் 2ஆம் லெப்டினன் ரோம், வீரவேங்கை நாயுடு ஆகியோர்க

(4ஆம் பக்கம் பார்க்க)

## வரிவிளம்பரம்

### நியூ வீனஸ்
### NEW VENUS

எமது அன்பான வாடிக்கையாளருக்கு ஒரு வேண்டுகோள் எமது ஸ்தாபனம் 153 A பலாலி வீதியில் (விவசாய பாடசாலை அருகில்)(NEAR FARM SCHOOL) நடைபெறுகின்றது. சகல மணிக்கூடுகளும், றேடியோக்களும் உத்தரவாதத்துடன் திருத்திக் கொடுக்கப்படும். சகல எலெக்ரோனிக் கடிகாரங்களின் பற்றறிகளும் விற்பனைக்குண்டு. (B/1470)

### டில்கா வாச் வேக்ஸ்
### (Dilka Watch Works)

வாடிக்கையாளரின் வசதிக்கமைய எமது ஸ்தாபனம் மானிப்பாய் வீதி ஆனைக்கோட்டையில் (இராம சபைக்கருகில்) நடைபெறுகின்றது. சகல மணிக்கூடுகளும், றேடியோக்களும் உத்தரவாதத்துடன் திருத்திக் கொடுக்கப்படும். சகல எலெக்ரோனிக் கடிகாரங்களின் பற்றறிகளும் விற்பனைக்குண்டு. (B-1444)

### போட்டோஸ்ரட்

தெளிவான போட்டோஸ்ரட் பிரதிகளையும் அடையாள அட்டைகளையும் கவர் இட்டு உடனடியாகப் பெற்றுக் கொள்ள கிளீன் கட் 37, சிவகுருநாதன் வீதி, பிறவுண் றோட், யாழ்ப்பாணம். (நீராவியடிப் பிள்ளையார் கோவிலுக்கு அண்மையில்) வேலை நேரம் தினமும் காலை 6 மணி தொடக்கம் மாலை 6 மணி வரை. (R / 705)

### தவறிவிட்டது

நாகநாதர் சந்திராவதி என்பவருடைய அடையாள அட்டை இல. 658412795V யாழ். பனை அபிவிருத்திச் சபைக் காரியாலயப் பகுதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து ''ஈழநாதம்'' காரியாலயத்தில் ஒப்படைக்கவும். (B-1486)


இ. நேரலட்சுமி என்பவருடைய அடையாள அட்டை (436413181V) யாழ். மக்கள் வங்கி அருகாமையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மூள்ளிவீதி, அரியாலை என்னும் முகவரியில் அல்லது ஈழநாதம் காரியாலையத்தில் ஒப்படைக்கவும். (R/722)

ஆரியகுட்டி வரதராசா ஆகியஎன் அடையாளஅட்டையும் (671091507V) குறிப்பிட்ட தொகைப்பணமும்பூநகரியில் தவறி விட்டது. கண்டெடுத்தவர்கள் முதலைக்குளி கரணவாய்தெற்கு, கரவெட்டி என்ற முகவரியில் அல்லது ஈழநாதம் காரியாலயத்தில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். (R/721)

நல்லூர் சங்கிலியன் வீதிக்கும் திருநெல்வேலிக்கும் இடையில் எமது முக்கிய படச்சுருள் ஒன்று தவறிவிட்டது. தயவு செய்து கண்டெடுத்தவர்கள் ஈழநாதம் காரியாலயத்தில் ஒப்படைக்கவும். (B. 1487)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

வீர ஜனனம் 29 – 07 – 1971



வீர மரணம் 13 – 09 – 1990

### விக்கினேஸ்வரன் (விக்கினா)
### வீரவேங்கை நெப்போலியன்

முத்தவனாய் முதன்மை பெற்று நாடுவாழ வீடுவாழ
உயர்கல்வி கற்க இந்தியா சென்று
விடுமுறையில் வீடு வந்து அமைதிப்படையின்
அநீதிகண்டு வேதனையில் வேங்கையானாய்!
கோட்டை வாயிலில் காவல் அரண்தனை
தலைமைதாங்கி கடமை உணர்வுடன்
காத்த வேளை பொங்கி எழுந்தது
புயலாய் சிந்தனை!
தங்கமாம் யாழ் கோட்டையை
சிங்கள வெறியர் ஆக்கிரமித்த வேளை
வேங்கையாய் வீரனாய் எழுந்து விரட்டி அடித்து
மார்பினில் குண்டு ஏந்திச் சாய்ந்தாய்
மாவீரன் ''நெப்போலியனாய்''

நாளை 13.10.90 சனிக்கிழமை 11 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறும் நினைவஞ்சலியிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளும்படி உறவினர், நண்பர்கள், போராளிகள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

''ஸ்ரீவிக்கினேஸ்வரா''
120, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

த. சங்கரசிவம் குடும்பத்தினர்
பாடசாலை வீதி
தாவடி - கொக்குவில்.

(R/719)

## 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தாயின் மடியில் 30 - 05 - 1969



தாயக மண்ணில் 13 - 10 - 1988

### கப்டன் கரிகாலன்
### (பொன்னம்பலம் கௌரிபாலன்)

(யாழ். பிராந்தியப் பொறுப்பாளர்)

''நான் ஆயுதங்களின் மீது கொண்ட வெறும்
கவர்ச்சியினால் ஆயுதமெடுக்கவில்லை.
அடிமையாய் வாழ்வதில் அர்த்தமில்லை
என்றுபட்டதினாலேயே ஆயுதமேந்தினேன்
மனிதநேயமுள்ள மக்கள் அனைவரும்
எமக்கு உதவுவார்கள் என்ற நம்பிக்கை
எனக்குண்டு எமது கரங்களில் இருந்து வீழும்
ஆயுதத்தை ஏந்த இன்னொருவர் இருக்கும் வரை
நாம் மரணத்தைக் கண்டு அஞ்சவில்லை''

\- கரிகாலன்

வரணி வடக்கு,
வரணி.

உன் நினைவில் வாழும்
அம்மா, அப்பா, அக்கா, அண்ணா,
தங்கை, நண்பர்கள்

(R.720)

## கிளிநொச்சி நகர் மீண்டும் வழமைக்குத் திரும்புகிறது

(கிளிநொச்சி)

கிளிநொச்சி நகர் மீண்டும் வழமைக்குத் திரும்பி வருகிறது. பல வர்த்தக நிலையங்கள் திறக்கப்பட்டுள்ளன. சில அரச அலுவலகங்களும் திறக்கப்பட்டுள்ளன. ஓரளவு சனநடமாட்டத்தையும் காணக் கூடியதாக இருக்கிறது.

கிளிநொச்சி, பரந்தன் தபால் நிலையங்கள் இரண்டும் கிளிநொச்சி தபால் நிலையத்தில் ஒரே கட்டடத்தில் இயங்கத் தொடங்கியுள்ளன. பரந்தன் தபால் நிலையக் கட்டடம் சேதமடைந்துள்ளதாலேயே பரந்தன் தபால் நிலையம் கிளிநொச்சியில் இயங்க ஆரம்பித்துள்ளது.

கொழும்பிலிருந்து கடிதங்கள் கொண்டு வரப்பட்டு, அவை தரம் பிரிக்கப்பட்டு பொது மக்களுக்கு வழங்கும் வேலையும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சிக் கச்சேரிக் கட்டடத்தில் இயங்கி வந்த திட்டமிடல் பணிமனை, கச்சேரி ஆகியனவும், கிளிநொச்சி உதவி அரசாங்க அதிபர் அலுவலகமும் சேதமடைந்ததால் அவை தற்காலிகமாக ஜெயந்தி நகரில் இயங்கி வந்தன.

அவற்றில் திட்டமிடல் அலுவலகம் கிளிநொச்சி நகரிலுள்ள காணி அலுவலக விடுதியில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. உதவி அரசாங்க அதிபர் பணிமனை, பிரதேசசபை ஆகியன கிளிநொச்சியிலுள்ள உதவி அரசாங்க அதிபர் விடுதியில்ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (49)

## தொழில் இழந்தோருக்கு நிவாரணம் வழங்கப்படவில்லை

(வேலணை)

ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் உள்ள அகதிகள் தொழில் இழந்தவர்களுக்கான நிவாரணப் பொருட்கள் இதுவரை சரியாகவழங்கப் படவில்லையெனப் புகார் தெரிவிக்கப்படுகின்றது.

யாழ். மாவட்டத்திலுள்ள பல உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் 3 ஆவது நிவாரண கொடுப்பனவுகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கும் இவ்வேளையில் இங்கு இந்த நிவாரணப் பொருட்கள்சரியாக ஏன்வழங்கப்படவில்லையென மக்கள் கேள்விக் கணைகளைத் தொடுத்துள்ளனர்.

ஏற்கனவே இவ்வுதவி அரசாங்க அதிபர் பிரிவில் முதலாவது கட்ட நிவாரணப் பொருட்களைத் தரப்படுத்தல் என்ற முறையில் கொடுத்த போதும் கூட அவற்றை பூரணமாக வழங்க அதிகாரிகள் முன்வரவில்லை எனவும் கூறப்படுகின்றது. (14)

திருநெல்வேலி
ஸ்ரீ முத்துமாரி அம்பாள் தேவஸ்தானம்

## கேதார கௌரி நோன்பு பூஜை

18–10–1990 வியாழக்கிழமை காலை 8 மணிக்கு கேதார ஈஸ்வரருக்கு விசேட பூஜையும் அதனை தொடர்ந்து திருவிழாவும் நடைபெற்று நோன்பு நூல் வழங்கப்படும்.

நோன்பு நூல் பெறவிரும்புபவர்கள் ஆலயத்தில் பதிவு செய்து கொள்ளவும்.

(R-718) -தேவஸ்தானம்

## 37 ஆம் நாள் நினைவஞ்சலி



தாயின் மடியில்: 8 - 2 - 1970

தாயகத்தின் மடியில்: 6 - 9 - 1990

### ஏகநாதன் விஜயானந்தா (ஹேமானந்)

(யாழ். இந்துக்கல்லூரி மாணவன்)

சுதந்திர தேவி சூடிய சாமந்திப்பூ நீ
சிறகிருக்கும் வரை சிறைப்பட மறுக்கும்
சக்கரவாகப்பட்சி!
நீ விடுதலையை விரும்பிய கீதம்
எங்கள் வார்த்தைகளும் வணங்கிடும் வேதம்
தேசத்தின் தெருக்களில் தொலைந்து போனவனே!
விடுதலைப் பாதையில் நீ எங்கள் வழிகாட்டி!
உன் குருதிச்சுவடுகள் தொடரப்படும்.
எங்கள் பாதங்கள் பயணப்படும். – சிந்தா

இன்று (12 - 10 - 1990) வெள்ளிக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் அந்தியேஷ்டி, சபிண்டீகரண நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளுமாறு உறவினர், நண்பர்களை அன்புடன் அழைக்கின்றோம்.

மருதடி,
காரைநகர்.

இப்படிக்கு
– குடும்பத்தினர்

(R - 723)

உங்கள் தற்போதைய உடனடித் தேவைகளுக்கு
❋ வீட்டு மின்னிணைப்புகள் ❋ பிளம்பிங் வேலைகள்
❋ வெல்டிங் ❋ மோட்டர் றிவைன்டிங்
மற்றும் சகல மின்சார வேலைகளும் சலுகை அடிப்படையில் உடனுக்குடன் செய்து கொடுக்கப்படும்.
ஜெகஜோதி என்ஜினியறிங் வேக்ஸ்
41, பஜார் லேன், யாழ்ப்பாணம்.
(B/1481) பதிவு இல. 4376.

## சிந்தனைக்கு

தேசியம் உறுதியான உண்மையான பின்புதான் சர்வதேசியத்திற்கு வாய்ப்புக் கூறுகள் உண்டு.
— மகாத்மா காந்தி


# ஈழநாதம்

31, வைமன்வீதி, யாழ்ப்பாணம். 12-10-90
தொலைபேசி
ஆசிரியபீடம்: 025-2839 நிர்வாகபீடம்: 2208
த. பெ. எண் 05


# இந்தியாவின் கடமை

ஒன்றுபட்ட இலங்கைக்குள் இனப்பிரச்சினையைத் தீர்க்க முடியாது என்பதை உணர்ந்து இந்தியா உடனடியாக தமிழரின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்க வேண்டும் என்று விடுதலைப்புலிகள் இந்தியாவிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கடந்த காலத்தில் இலங்கையில் தமிழருக்கு எதிரான வன்முறைகள் நிகழ்ந்த போதும் இனப்பிரச்சினை கூர்மையடைந்த போது இந்தியா ஏதோ ஒரு வகையில் பாதிக்கப்பட்டதோடு ஓரளவு தலையிட்டும் வந்துள்ளது.

ஆனால் 1983ஆம் ஆண்டிற்குப் பிறகு இனப்பிரச்சினை தீவிரமடைந்தபோது இந்தியா இப்பிரச்சினையில் தனது அபிலாசைகளையும் கருத்திற் கொண்டுஓரளவு தீவிரமாகத் தலையிட்டதெனலாம். இந்தியாவில் இருந்து பல இராஜதந்திரிகள், அமைச்சர்கள் தொடர்ந்தும் கொழும்பு வந்து போனார்கள்.

மறைந்த இந்தியப் பிரதமர் இந்திராகாந்தி காலத்திலும் சரி அவர் மகன் ராஜீவ்காந்தி காலத்திலும் சரி பேச்சுவார்த்தையின் மூலமோ நல்லெண்ண நடவடிக்கைகள் மூலமோ இனப் பிரச்சினைக்கு எந்த ஒரு முடிவும் எடுக்க முடியவில்லை. அதாவது இனப்பிரச்சினைத் தீர்வுக்கு வழிவகுக்கக் கூடியதாக சிறியதொரு அதிகாரப் பரவலாக்கத்தையும் சிறிலங்கா அரசாங்கம் மேற் கொள்ளத் தயாராக இருக்கவில்லை.

இந்நிலையில் லிபரேசன் ஒப்பரேசனைத் தொடர்ந்து சிறிலங்கா - இந்திய சமாதான ஒப்பந்தம் ஏற்பட்டது. இந்த ஒப்பந்தம் இரு நாடுகளின் நன்மையைக் கருதி மட்டுமே இருந்த வேளை தமிழ் மக்களுக்கு மிகச் சொற்பமான ஒருசில சலுகைகளை வழங்குவதாகவும் குறிப்பிட்டது.

இதைத் தொடர்ந்து ஒருலட்சம் இந்தியஇராணுவத்தினர் வடக்கு கிழக்கில் நிலை கொண்டனர். இந்த ஒப்பந்தத்தின் பிரகாரம் இந்திய, சிறிலங்கா அரசுகள் சம்பந்தமான சில தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டபோதும், தமிழரின் உரிமைகள் தொடர்பாக எந்தவித முன்னேற்றமும் ஏற்படவில்லை. குறிப்பாக அதிகாரப் பரவலாக்கலைச் செய்வதற்கு சிறிலங்கா அரசாங்கம் முன்வரவே இல்லை.

தமிழர்களின் உரிமைகளைச் சிறிலங்கா அரசாங்கம் தட்டிக் கழிக்கின்றது என உணர்ந்திருந்த இந்தியா தமிழருக்கு சிறிதளவேனும் உரிமைகளைப் பெற்றுக் கொடுக்க முயற்சித்தது அதில் தோல்வியும் கண்டது.

வடக்கு - கிழக்கில் இருந்து இந்திய இராணுவம் வெளியேறத் தொடங்க முன்னரே இந்தியா தான் தோல்வி அடைந்து விட்டதையும், தமிழர்களின்உரிமைகள் எள்ளளவேனும் ஒப்பந்தத்தால் பாதுகாக்கப்படவில்லை என்பதையும்ஏற்றுக்கொண்டது. இதனால்தனதுபொம்மையான மாகாண அரசைக் கொண்டு ஈழப் பிரகடனத்தைச் செய்வித்தது. ஆனால் பொம்மை அரசுபலவீனமானதால் அக் கோரிக்கையே காற்றில் அடிபட்டுப் போய்விட்டது.

இன்று மீண்டும் இனப்படுகொலை, என்றும் இல்லாதவாறு கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளது. குறிப்பாக கிழக்கில் தமிழரைப்படுகொலை செய்வதிலும், விரட்டுவதிலும் சிறிலங்கா இராணுவம் ஈடுபட்டுள்ளது. இந்திய-சிறிலங்கா சமாதான ஒப்பந்தத்தில் கிழக்கு மாகாணம் தமிழரின் தாயகம் என ஒப்புக்கொள்ளப்படாவிட்டாலும், தமிழரின் வரலாற்று ரீதியான வாழ்விடம் என்பது ஒப்புக் கொள்ளப்பட்டிருந்தது. இதனை மறுக்கும் வகையிலேயே இன்று சிறிலங்கா அரசாங்கம் செயற்படுகின்றது.

இந்நிலையில் தமிழரின் தாயகக் கோட்பாட்டையும் சுய நிர்ணய உரிமையையும் இந்தியா வெளிப்படையாக அங்கீகரித்து தமிழருக்கு தார்மீக உதவியை தரவேண்டும். இந்தியாவின் தார்மீக உதவியை இலங்கைத் தமிழர் எப்பொழுதும் எதிர்பார்த்தே இருந்தனர். ஆனால் தமிழரின் உரிமையை மதிக்காமல் இந்தியா நடந்து கொண்டபோதே இந்தியாவுடன் மோதவேண்டிய நிர்ப்பந்தம் தமிழருக்கு ஏற்பட்டது.

இன்று இந்தியாவில் குறிப்பாக தமிழ் நாட்டில் சகல அரசியற் கட்சிகளும் ஒன்று திரண்டு தமிழரின் போராட்டத்தையும், விடுதலைப் புலிகளையும் ஆதரிக்கின்றார்கள். திராவிடக் கழகங்கள் தொடக்கம் இந்திரா காங்கிரஸ்வரை விடுதலைப்புலிகளுக்கு உதவுவதன் மூலமே தமிழரைப் பாதுகாக்கலாம் எனத் தமது ஆதரவை தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில்இந்தியமத்திய அரசும் இலங்கைத் தமிழரின்சுயநிர்ணய உரிமையை அங்கீகரித்து தார்மீக ஆதரவுதரவேண்டும். இந்த ஆதரவுமூலம் இந்தியா கடந்த காலத்தில் தமிழ் மக்களுக்கு இழைத்த அநீதிக்கு பரிகாரம் காணவேண்டும். இவ்வாறு நடந்துகொள்ள வேண்டியது இந்தியாவின் பொறுப்பும் கடமையுமாகும்.

# யாழ். கோட்டைக்குள் முற்றுகையில் முடங்கிக் கிடந்த 110 நாட்கள் - ஒரு பொலிஸ்காரரின் அனுபவம்

*யாழ். கோட்டை முகாம் விடுதலைப் புலிகளின் முற்றுகைக்கு உள்ளாகி இருந்த போது அங்கு சில தமிழ்ப் பொலிஸாரும் இருந்தனர். அண்மையில் வீடு திரும்பிய ஒரு பொலிசார் 'ஈழநாதம்' நிருபர் கணேசலிங்கத்துடன் உரையாடியதிலிருந்து தொகுக்கப்பட்டவை இங்கே தரப்படுகின்றது.*

யாழ். கோட்டை முற்றுகை ஆரம்பமான போது முகாமில் இராணுவத்தினருடன் 100பொலிசார் தங்கி இருந்தனர். பொலிசாரில் 75பேர் முஸ்லிம்களும் 25பேர் தமிழர்களும் இருந்தனர்.

முற்றுகையின் ஆரம்பத்தில் முகாம் மீது தாக்குதல்கள் இருக்கவில்லை. இராணுவத்தினரும் வெளிநோக்கித் தாக்கவில்லை. ஒருகட்டத்தில் 24 மணிநேர போர் நிறுத்தம் ஏற்பட்ட சமயம் பொலிஸ் உயர் அதிகாரிகள் வெளியேறிவிட்டனர். பின்னர் மீண்டும் போர் மூண்டபோது கோட்டை மீதான முற்றுகை பலமாக இருந்ததுடன் முகாம் மீது தாக்குதலும் அதிகமாக இருந்தது. இதனால் ஏனைய பொலிசார் வெளியேவரமுடியவில்லை.

முற்றுகை ஆரம்பிக்க சில நாட்களுக்கு முன் இரண்டு லொறிகளில் கோட்டையினுள் கொண்டுவரப்பட்ட காட்டுவிறகுக் குற்றிகளை கோட்டையின் பிரதான வாயிலில் அடுக்கப்பட்டு இவ்வாசல் பலமாக மூடப்பட்டதுடன் இப் பகுதியில் சக்திவாய்ந்த கண்ணிவெடிகளும் இராணுவத்தினரால் புதைக்கப்பட்டன.

விடுதலைப் புலிகளின் முற்றுகையின் ஆரம்பத்தில் முகாம்மீது பெரிய அளவிலான தாக்குதல் எதுவும் இடம் பெறவில்லை. அத்துடன் புலிகள் உணவுப் பொருட்களையும் உள்ளே அனுப்பி வைத்தனர்.

சில நாட்கள் சென்றதும் புலிகளின் கோட்டை மீதான தாக்குதல்கள் தீவிரம் அடைந்ததுடன் உணவுப் பொருட்களும் அனுப்பி வைக்கப்படவில்லை. இதனால் முகாமின் உள்ளே உணவுப் பற்றாக்குறையும் ஏற்படத் தொடங்கியது. புலிகள் ஆரம்பத்தில் அனுப்பிய அரிசி கையிருப்பில் இருந்ததால் சிறிது காலம் சோறும், உப்பு நீரும் இராணுவத்தினருக்கும் பொலிசாருக்கும் வழங்கப்பட்டன.

பொலிஸ் உயர் அதிகாரிகள் இல்லாமையினால் அனைத்துப் பொலிசாரும் இராணுவத்தினரின் பணிப்புரையின் படியே வேலை செய்யவேண்டி ஏற்பட்டது.

பொலிசாரையே பெரும்பாலும் காவல் அரண்களில் நிறுத்தினார்கள்.

முஸ்லிம் பொலிசார் சாதாரணமான சந்தர்ப்பங்களில் இராணுவத்தினருக்குச் சார்பாகவே செயலாற்றினார்கள்.

தமிழ் பொலிசார் மீது இராணுவத்தினருக்கு நம்பிக்கை அற்ற நிலை இருந்தது. இவர்கள் இருவர் சந்தித்து நீண்ட நேரம் கதைத்தால் போதும், இவர்களைப் பிரித்து வெவ்வேறு பகுதிகளில் உள்ள காவல் அரண்களுக்கு மாற்றி விடுவார்கள்.

ஆனால் சிங்கள இராணுவ அதிகாரிகள் முஸ்லிம் பொலிசார் மீது கடமைகளை வலுக்கட்டாயமாகத் திணிக்க முயலும் போது அவர்கள் ஆத்திரமடைந்தனர். இவ்வாறு ஆத்திரமடையும் முஸ்லிம் பொலிசார் இராணுவத்தினருடன் கைகலப்பில் ஈடுபடுவர். இக்கைகலப்பு துப்பாக்கிச் சண்டையில் முடிந்த நிகழ்வுகளும் உண்டு. இதனால் சில பொலிசாரும் இராணுவத்தினரும் காயமடைந்திருக்கிறார்கள்.

பல நாட்கள் பொலிசாரைக் காவல் அரண்களில் விடும்போது அவர்கள் அரண்களில் கடமை நேரத்தில் நித்திரை செய்வதும் உண்டு. இது இராணுவத்தினருக்குத் தெரிய வந்தால் தண்டனை வழங்கப்பட்டு மேலும் பல நாட்கள் தொடர்ந்து காவல் அரண்களில் நிறுத்தப்படுவார்கள். மிக உயர்ந்த தண்டனையாக கோட்டை மதிலின் மேல் ஏறிநிற்கும்படி பணிப்பார்கள். இப்படி ஏறி நின்ற சில பொலிஸ்காரர்கள் விடுதலைப் புலிகளின் சினைப்பர் தாக்குதலில் கொல்லப்பட்டனர். கொல்லப்படும் பொலிஸ், இராணுவ வீரர்களின் உடல்களை முகாமின் ஒதுக்குப்புறமாக புதைப்பார்கள். சிறு காயம் அடைபவர்களுக்கு மட்டுமே இங்கு சிகிச்சையளிக்க வசதி இருந்தது.

போர் மூண்ட ஆரம்ப காலத்தில் கோட்டையின் உள்ளே ஓரளவு சுதந்திரமாக நடமாட முடிந்தது. ஆனால் முகாம் மீது புலிகள் மேற்கொண்ட ''பசிலன் 2000'' ஷெல் தாக்குதல்களைத் தொடர்ந்து இராணுவத்தினர் நிலை தடுமாறி பதுங்கு குழிகளில் கூடியளவு நேரத்தைக் கழித்தனர். காவல் அரண்களில் இருப்பவர்களும் அந்தந்த இடத்திலேயே பல நாட்களாக நிலைகொண்டனர். மலம் கழிப்பதற்கு மட்டுமே அரண்களை விட்டுக் கீழே இறங்குவார்கள். இதனால் இவர்களுக்குக் குளிப்பதற்கோ அல்லது ஓய்வெடுப்பதற்கோ சந்தர்ப்பம் கிடைப்பதில்லை.

புலிகளின் தாக்குதலால் கட்டிடங்கள் உடையும் சமயங்களில் கட்டிட கூரைப் பகுதி மரங்களை இராணுவத்தினர் சேகரித்து தமது பதுங்கு குழிகளைப் பலப்படுத்துவார்கள்.

விமானப்படையின் அவ்ரோ விமானங்கள் வீசும் பீப்பாக் குண்டுகள் ஒரிரு தடவைகள் கோட்டை முகாமுக்குள்ளும் விழுந்துள்ளன. ஒரு நாள் உள்ளே விழுந்த குண்டினால் இரு இராணுவத்தினரும் ஒரு பொலிஸாரும் கொல்லப்பட்டனர்.

மீண்டும் ஒருநாள் பீப்பாக் குண்டு வீழ்ந்து வெடித்ததில் ஒரு இராணுவவீரர் கொல்லப்பட்டார். இச்சந்தர்ப்பங்களில் ஏனைய இராணுவத்தினர் விமானப்படை மீதும் கோபம் அடைந்தனர்.

புலிகள் கோட்டைமீது தாக்குதலை தீவிரப்படுத்திய சமயங்களில் பலாலி முகாமில் இருந்து கோட்டை நோக்கி ஷெல் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டபோது ஷெல் குண்டுகள் கோட்டையின் உள்ளும் வீழ்ந்து வெடித்ததில் இரு இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். பலர் காயமடைந்தனர். இதனால் கடும் சினம் கொண்ட இராணுவத்தினர் தகாத வார்த்தைகளால் பலாலி இராணுவத்தினரையும், கோட்டை முகாம் உயர் இராணுவ அதிகாரிகளையும் மேஜர் ஜெனரல் டென்சில் கொப்பேக்கடுவாவையும் தூஷிப்பார்கள்.

முற்றுகையின் இறுதிக்காலத்தில் முகாமில் துப்பாக்கிரவைகள் ஓரளவு இருந்த போதிலும் ஷெல் குண்டுகள் தீர்ந்துவிட்டன. 5 அல்லது 6 ஷெல்களை மட்டும் அவசர தேவைகளுக்காக வைத்திருந்தனர்.

விடுதலைப் புலிகள் ஆரம்பத்தில் அனுப்பிவைத்த உணவுப் பொருட்கள் தீர்ந்து போனதும் உணவு இல்லை என அரசுக்கு அறிவித்தும் பல நாட்களாக எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. இதனால் 4 அல்லது 5 நாட்கள் உணவு ஏதும் உண்ணாமலே பலஇராணுவத்தினரும்பொலிசாரும் இருந்தனர். பின்னர் விமானமூலம் உணவுப் பொதிகள் போடப்பட்டன. உள்ளே விழும் சில உணவுப் பொதிகளில் உள்ள விசேட உணவு வகைகள் உயர் இராணுவ அதிகாரிகளால் எடுக்கப்பட்டன.

விமானங்கள் முகாமின் உள்ளே உள்ள தொலைத் தொடர்புக் கோபுரத்தை மையமாக வைத்தே உணவுப் பொதிகளை வீசின. ஒருநாள் விடுதலைப் புலிகளின் ''பசிலன் 2000'' ஷெல்தாக்குதலால் தொலைத்தொடர்புக் கோபுரம் சரிந்து வீழ்ந்தது. இதன் பின்பு முகாமுக்கு விமானப்படையினரால் உணவு வீச முடியாமல் போய்விட்டது. வீசும் உணவுப் பொதிகள் உள்ளே விழும் வீதமும் குறைவடைந்தது.

முல்லைத்தீவு, கொக்காவில் போன்ற இடங்களில் கடும் போர் நடைபெற்ற காலப் பகுதிகளில் முகாமுக்கு உணவு போட விமானப் படையினர் வருவதில்லை. இதனால் 3அல்லது 4 நாட்கள் உணவு இல்லாமலே இருந்தனர்.

படையினருக்கு மூன்று வேளையும் உணவு வழங்குவதென்றால் அது முகாமின் உள்ளே விழும் உணவுப் பொதிகளினாலேயே தீர்மானிக்கப்பட்டது.

முற்றுகை முறியடிப்பு எனக் கூறி மண்டைதீவில் இருந்து கடற்கரைப்பகுதி மதிலின் துவாரம் ஊடாக சில இராணுவத்தினர் உள்ளே நுழைந்ததும் மகிழ்ச்சியில் துள்ளிக் குதித்தனர். இவர்கள் அரசின் வானொலி அறிவித்தபடியாழ் நகரின் ஸ்ரான்லி வீதி வரை இராணுவத்தினரின் கட்டுப்பாட்டில் இருக்கிறது என்பதை நம்பினார்கள். கடல் வழியாக வந்து குருநகர்கடற்கரையால் முன்னேறிய இராணுவத்தினர் குருநகர் மாடி வீட்டில் முகாம் அமைத்துள்ளனர் என்றும், இப்பொழுது விடுதலைப்புலிகள் மீது இரு தரைப்பகுதிகளில் இருந்து தாக்குதல் நடைபெறுகிறது என்றும் விரைவில் கோட்டையை மீட்டு எடுத்து விடுவார்கள் என்றும் மண்டைதீவு

(4ஆம் பக்கம் பார்க்க)

# 16 குழந்தைகள் மடு அகதிமுகாமில் வயிற்றோட்டத்திற்குப் பலி

(வவுனியா)

அரச அங்கீகாரம்பெற்ற அகதிமுகாமுக்கு சில பொருட்கள் கொண்டுவருவதையே இராணுவம் தடைசெய்கிறது; இவ்வாறு தடைசெய்யப்பட்ட பொருட்களை மீட்டெடுத்து வரமுடியாமல் உள்ளது.

மேற்கண்டவாறு மடு திருப்பதி நிர்வாகத்துடன் சம்பந்தப்பட்ட குருவானவர் ஒருவர் தெரிவித்தார்.

ஈழநாதம் சார்பில் மடு திருப்பதியில் இடம்பெற்ற சந்திப்பின் போது அவர் மேலும் தெரிவித்ததாவது,

பருவமழை காரணமாக மரங்களின்கீழ் தங்கியுள்ள மக்கள் பாதிக்கப்படுவது பற்றிக் கேட்டபோது, அகதிகள் புனர்வாழ்வு உயர் ஸ்தானிகர் நிலையத்தின் ஆதரவுடன் 100 அடி நீளத்திலும் 24 அடி அகலத்திலும் பத்துக் குடிசைகள் அமைக்கப்பட்டு அவற்றில் 160 குடும்பங்கள் தங்க வைக்கப்பட்டுள்ளனர் என்று அவர் குறிப்பிட்டார்.

இவ்வாறான குடிசைகள் மேலும்பல அமைத்து மரங்களின் கீழிருந்து கஷ்டமடையும் மீதி மக்களையும் குடியமர்த்த எண்ணியிருப்பதாக அவர் தெரிவித்தார்.

இந்த அகதிமுகாம் அமைக்கப்பட்ட புதிதில் பதினாறுக்கும் மேற்பட்ட குழந்தைகள் வயிற்றோட்ட நோயினால் இறந்துள்ளனர் என்றும் அவர் தெரிவித்தார்.

இதுவரை இந்திய அரசின் எந்த உதவியும் இந்த அகதி முகாமுக்கு கிடைக்கவில்லை என்றும், இம்முகாம்களுக்குக் கிடைக்கும் நிவாரணப் பொருட்களிலும் தீப்பெட்டி, மெழுகுதிரி போன்ற பொருட்கள் கொண்டுவர இராணுவம் தடை விதித்துள்ளது என்றும் இவ்வாறான பொருட்கள்பல இராணுவத்தினரால் கைப்பற்றப்பட்டுள்ளன என்றும் அவர் தெரிவித்தார். (தி)

## வீரவணக்கம்

இரண்டு வெவ்வேறு சம்பவங்களில் இன்னுயிர் ஈந்த வீர வேங்கைகளான இந்திரன், தயாளன் ஆகியோருக்கு விடுதலைப் புலிகள் தமது வீர வணக்கத்தை தெரிவித்துள்ளனர். கடந்த 10. 10. 90 அன்று நண்பகல் 12. 50 மணியளவில் காங்கேசன்துறை முகாமிலிருந்து வெளியேற முயன்ற இராணுவத்தினருடன் ஏற்பட்ட நேரடி மோதலின்போது வீர வேங்கை இந்திரன் (கனகரத்தினம் இந்திரவேல் தெல்லிப்பளை) என்பவரும், அதே தினம் தற்செயலாக ஏற்பட்ட வெடி விபத்தின்போது வீர வேங்கை தயாளன், (துரைசிங்கம் ரஜீவன் தையிட்டி) என்பவரும் வீர மரணமடைந்தனர்.

# 150 பீப்பா மின் மாற்றி ஒயில் அனுப்ப அரசஅதிபர் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்திற்குள் உள்ள ஏராளமான டிரான்ஸ்போமர்களுக்குத் தேவையான மின்மாற்றிகளுக்குரிய ஒயில் நூற்றியம்பது பரல்களை விரைவில் யாழ். மாவட்டத்திற்கு அனுப்பிவைக்கும்படி யாழ்ப்பாண அரசாங்க அதிபர் அன்ரன் அல்பிரட் மத்திய மின்சாரசபையிடம் கடித மூலம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இந்த கடிதப் பிரதிகளில் ஒன்று அத்தியாவசிய சேவைகள் நாயகத்திற்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.

இதேவேளை யாழ். மாவட்டத்திற்கு மின்சாரம் வழங்குவதற்கான தற்காலிக திட்டத்தில் சில உதிரிப்பாகங்களும் தேவை எனவும் அத்துடன் கடந்த காலத்தில் சிலரால் சந்தர்ப்பம் பார்த்து திருடப்பட்ட 'மின்மாற்றி ஒயிலுக்கு' பதிலாக புதிய ஒயில் நிரப்பப்படவேண்டும் எனவும் அவ்வாறு நிரப்பப்பட்டாலன்றி வேறு வழிகளில் வடபகுதிக்கு மின்சாரம் கொண்டுவர முடியாத நிலையே இருந்து வருவதாக வடபகுதி மின்சாரசபை அதிகாரிகள் ஏற்கனவே குறிப்பிட்டிருந்தனர். (லோ)

### போர்மண்ணிலே

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

தமது பிரதேசப் பொறுப்பாளர்கள் ஊடாக மக்கள் முன்னணி அச்சுவேலி பிரதேசப் பொறுப்பாளர் பி. கர்ணன் அவர்களுடன் தொடர்பு கொண்டு ஏற்பாடுசெய்யலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

### யாழ் கோட்டைக்குள்

(3ஆம் பக்கத் தொடர்ச்சி)

முகாமில் இருந்து அறிவிக்கப்பட்டது.

இந்த அறிவிப்பினாலும், மண்டைதீவு முகாமிலிருந்து கோட்டைக்குள் நுழைந்து விட்டோம் என்ற வீர உணர்ச்சியினாலும் உந்தப்பட்ட சில இராணுவ வீரர்கள் கவச வாகனம் ஒன்றில் பிரதான வாயில் வழியாக வெளியேறினார்கள். இவர்கள் வாயிலைக்கடந்ததும் விடுதலைப் புலிகளின் கடும் தாக்குதலுக்கு உட்பட்டு அவ்விடத்தில் அனைவரும் கொல்லப்பட்டனர்.

பின்னர் புலிகளின் கடும் தாக்குதலுக்கு ஈடுகொடுக்க முடியாத படையினர் வெளியேறுவதற்குத் தீர்மானித்து தாம் வைத்திருந்த பெரும்பாலான ஆயுதங்களைப் போட்டுத் தீ மூட்டிவிட்டு அவசர அவசரமாக உயிர்தப்பினால் போதும் என்ற நிலையில் முகாமின் கடற்கரைப் பகுதியில் இருந்த மதில் துவாரம் ஊடாக வெளியேறினர்.

வெளியேறிய படையினர் மண்டைதீவில் நிற்கும்போது மேஜர் டென்சில் கொப்பேகடுவா மிகுந்த துயரம்படிந்த முகத்துடன் உங்களைச் சிகிச்சைக்காக மருத்துவமனைக்கு அழைத்துச் செல்ல இருப்பதாக கூறினார். பின்பு ஹெலிகொப்டர் மூலம் பலாலிக்கு சென்ற போது அங்கே அமைச்சர் ரஞ்சன் இந்த இராணுவ பொலிஸ் வீரர்கள் ஏதோ செயற்கரிய வீரச் செயலைச் செய்து முடித்துவிட்டு வந்தது போல எண்ணி அனைவருக்கும் கைகொடுத்து வீரவசனங்கள் பேசினார். பின்னர் அங்கிருந்து இரத்மலானை வழியாக பொறளை மருத்துமவனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகின்றனர்.

# ஆனையிறவு தபால்களை பளையில் பெறலாம்

(யாழ்ப்பாணம்)

ஆனையிறவு உபதபால் அலுவலக விநியோக எல்லைக்குட்பட்ட கடிதங்கள் யாவும் பளை தபால் அலுவலகத்தில் வைத்து விநியோகப்படுகின்றன என்று பளை அதிபர் செ. சிவப்பிரகாசம் அறிவித்துள்ளார்.

இவ் அலுவலகம் கடந்த ஜூலை மாதத்தில் இருந்து இராணுவ நடவடிக்கை காரணமாக இயங்கவில்லை என்பது தெரிந்ததே.

பொதுமக்களும், அரச, தனியார் ஸ்தாபனங்களும் தங்களுக்குரிய கடிதங்களை உரிய ஆதாரத்துடன் பளை தபால் அலுவலகத்தில் கடமை நேரத்தில் பெற்றுக் கொள்ளுமாறு தபால் அதிபர் கேட்டுக் கொள்கிறார்.

### மிதிவெடியில்

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மானிப்பாய் போதனா மருத்துவமனைப் பிரிவில் சிகிச்சை பெற்று வருகின்றனர். மேலும் பசுபதிப்பிள்ளை (வயது 60), நாகராசா (வயது 50) ஆகியோர் சிறு காயமடைந்து புங்குடுதீவு மருத்துவ மனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இவர்கள் இப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினரால் சேதமாக்கப்பட்ட வீதியை சிரமதான முறையில் திருத்தி அமைக்கும் பணியில் ஈடுபட்டிருக்கும்போதே இச் சம்பவம் நிகழ்ந்தது. (க)

### அடிக்கடி

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

களையும் ஏற்றிச் செல்வதனால் இப்படகுகள் அடிக்கடி இக்கடலில் கவிழ்ந்து விடுகின்றன. இதனால் பிரயாணிகளுடைய பெறுமதியான பொருட்களும், சைக்கிள் வண்டிகளும் கடலில் வீழ்ந்து சேதமாவதுடன் அதில் பிரயாணம் மேற்கொள்வோரும் கடலில் வீழ்ந்து விடுகின்றார்கள். (15)

### பெண்ணுடன்

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)


கடமையில் ஈடுபட்டிருந்த இராணுவத்தினர் வாலிபரின் உறவு முறையான பெண்களுடன் அங்க சேஷ்டையில் ஈடுபட்டதினாலேயே ஆத்திரமடைந்த வாலிபர் இராணுவத்தினரைத் தாக்கியுள்ளார். இச் சம்பவத்தைத் தொடர்ந்து பத்துக்கு மேற்பட்ட இராணுவத்தினரால் வாலிபர் நையப்புடைக்கப்பட்டு, மயக்கமுற்ற நிலையில் இராணுவ முகாமுக்குக் கொண்டு செல்லப்பட்டார்.

சம்பந்தப்பட்ட வாலிபர் தமது துப்பாக்கிகளைப் பறிப்பதற்கு எத்தனித்ததால், தாம் அவரைத் தாக்கிக் கைது செய்ததாக இராணுவத் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

கொழும்பு பத்திரிகைச் செய்தியாளர் ஒருவர் வாலிபனின் பெயர், மற்றும் விபரங்களை விசாரித்த சமயம் அவரது வயது மட்டும் 35 என்று தெரிவிக்கப்பட்டதாம். வேறு விபரங்களைத் தர இராணுவம் மறுத்துவிட்டது.

இச் சம்பவத்தையடுத்து கொழும்பு செல்வதற்கு நின்ற பிரயாணிகள் இராணுவத்தினரால் திருப்பி அனுப்பப்பட்டனர். ஆண்களும், பெண்களுமாக பலர் இராணுவத்தினரால் தாக்கப்பட்டனர்.

சம்பந்தப்பட்ட வாலிபரின் தற்போதைய நிலை பற்றிய விபரம் ஒன்றும் அறியப்படவில்லை. (தி)




## வீரமரணம்

திருக்கோணமலை மாவட்ட வேப்பங்குளம் 10 ஆம் கட்டை என்ற இடத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை இரவு 7.30மணி அளவில் சிறிலங்கா இராணுவத்தினர் மறைந்திருந்து தாக்குதல் நடத்தியதில் 'சங்கர்' என்ற போராளி வீரமரணமடைந்துள்ளார். இவருக்கு விடுதலைப் புலிகள் தமதுவீரவணக்கத்தைத் தெரிவித்துள்ளனர்

### விக்டரின் நினைவு

ளின் 4ஆவது ஆண்டு நினைவஞ்சலிக்கூட்டம் பூநகரி வாடியடி மைதானத்தில் இன்று மாலை 6-00 மணிக்கு நடைபெறுகிறது.

பூநகரி பள்ளமடுப் பிரதேசப் பொறுப்பாளர் சாம் தலைமையில் நடைபெறும் இக்கூட்டத்தில் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறுகின்றன. (71)

### வவுனியாவில்தமிழ்ப்

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

வவுனியா வந்த இளைஞர் ஒருவர் தான் பொலிஸ்காரர் என்றும், அண்மையில் ஆரம்பித்த யுத்தத்தின் பின் சேவைக்கு செல்ல முடியாமல் யாழ்ப்பாணத்தில் இருந்ததாகவும் கொழும்பு சென்று தனது சேவையைத் தொடரப் போவதாகவும் காவல் அரணில் நின்ற இராணுவத்தினரிடம் கூறி, தான் பையில் கொண்டுவந்த சீருடையை அவர்களுக்கு காண்பித்தார்.

பின்பு, ரயில் பிரயாணம் செய்வதற்காக புகையிரத நிலையம் சென்ற குறிப்பிட்ட இளைஞரை தேடி வந்த சிலர். அவரை அந்த இடத்திலேயே கடுமையாகத் தாக்கி, கைது செய்து கொண்டு சென்றனர்.

கைது செய்யப்பட்டவரின் நிலை பற்றி தெரியவரவில்லை.

இராணுவ உளவாளிகளே அந்த இளைஞரைக் கைது செய்ததாகச் சந்தேகிக்கப்படுகிறது. (தி)

### வவுனியாவில்

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அன் கொம்பனிக்கு அண்மையில் காவல் முகாம் அமைக்கப்பட்டுள்ளது.

இந்த முகாம்களில் ஏராளமான இராணுவத்தினர் சேவையில் ஈடுபட்டுள்ளனர்.

தவிர வவுனியாவில் உள்ள சில இராணுவ முகாம்களிலிருந்து இராணுவத்தினர் வெளியேற உள்ளனர் என்று அண்மையில் வெளியான செய்தியில் எவ்வித உண்மையும் இல்லை என்று அறியப்படுகிறது. (தி)

### கொழும்பிற்கு

மேலும் கருத்து வெளியிட்ட அமைச்சர் வடக்கு, கிழக்குப் பகுதிகளிலிருந்து கொழும்பிற்கு வருபவர்கள் அகதி முகாமிலேயே தங்க வேண்டும் எனவும் உறவினர் அல்லது நண்பர்கள் வீடுகளில் தங்கி இருக்க விரும்புபவர்கள் அண்மையில் இருக்கும் காவல் நிலையத்தில் தம்மைப் பதிவு செய்து கொள்ள வேண்டும் எனவும் தெரிவித்துள்ளார்.

மேலும் அவர் கருத்து வெளியிடுகையில் விடுதலைப் புலிகள் போக்குவரத்துத் தடையைத் தளர்த்தியதில் உள்நோக்கம் உண்டென்றும், இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி பலவிடுதலைப் புலிகள் கொழும்பு வந்துள்ளனர் என பாதுகாப்பு அதிகாரிகள் கருதுவதாகவும் தெரிவித்தார்.

மேலும் அவர் தெரிவிக்கையில் ஏற்கனவே வெள்ளவத்தையிலும், பம்பலப்பிட்டியிலும், தமிழ் அகதிகளுக்காக முகாம்கள் திறக்கப்பட்டுள்ளன என்றும் தேவைப்பட்டால் மற்றுமொரு முகாம் இரத்மலானையில் திறக்கப்படும் எனவும் வடக்கின் பாதுகாப்பு நிலைமைபற்றிக் குறிப்பிடுகையில் ஒருசில யுத்த முனைகளில் சண்டைதொடர்வதாகவும் கூறினார்.

### ஆயிரக்கணக்கில்

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

னர் பலத்த சோதனை செய்கின்றனர். இந்தச் சோதனையின்போது சகலரும் தனித்தனியாகவே சோதனைக்கு உட்படுத்தப்படுகின்றனர். தாய், சகோதரர்களுடன்செல்லும் இளம் பெண்களும் இவ்வாறு சோதனைக்கு உட்படுத்தப்படும் போது இராணுவத்தினரின் சேட்டைகள் இடம்பெறுவதாகவும் தெரிகின்றது.

அதேவேளை கொழும்பு சென்ற இளைஞர்கள் நூற்றுக்கணக்கில் கைது செய்யப்படுவதாகவும் அவர்கள் எங்கு தடுத்து வைக்கப் பட்டுள்ளார்கள் என்பதுவோ அவர்களுக்கு என்ன நடந்தது என்பது பற்றியோ விபரங்கள் எதுவும் கிடைக்கவில்லை எனவும் தெரியவருகிறது.

அதேவேளை ஜூன் 11இல் விடுதலைப்புலிகளுக்கும், சிறிலங்கா இராணுவத்தினருக்கும் இடையே சண்டை தொடங்கியபோது கொழும்பில் கைதான நூற்றுக்கணக்கான இளைஞர்களில் பலர் படுகொலைக்கு உள்ளாகினர் என்பதும், காணாமல் போயினர் என்பதும் குறிப்பிடத்தக்கது.


HOT SPRING

A Weekly News Magazine of Current affairs published from Jaffna.

★ Authentic representation of Lively News.

★ To keep oneself abrest of the Issues, trends and developments reading of HOT SPRING is a must.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் வைமன் வீதி 31-ஆம் இலக்கத்திலுள்ள ''ஈழநாதம்'' பணிமனையில் 1990-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 12 ஆம் தேதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.



# நான்காம் ஆண்டு நினைவஞ்சலி

மன்னார் பிராந்தியத் தளபதி

## லெப்டினனட் கேணல் விக்டர்

(மருசலீன் பியூஸ்லஸ்)

- எதிரிகளின் படையணி கலங்கிடச் செய்தவன்
- எங்களின் மண்ணிது எங்களுக்கென்றவன்
- தாயக விடியலைத் தாகமாய்க் கொண்டவன்
- தானை நடத்தியோர் சரித்திரம் படைத்தவன்
- தீயவர் பாசறை தீய்ந்திடச் செய்தவன்
- தீரன் எம் **விக்டரின்** வீரமோர்காவியம்!

(B/1472)

பள்ளமடு பிரதேச
பூநகரி பள்ளிக்குடா சிற்றூரவையினர்.